# இறையன்புவின் படைப்பில் சமயச் சிந்தனைகள்

**ச.விஜயலட்சுமி**

**முனைவர்பட்ட ஆய்வாளர்**

**வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்**

**பல்லாவரம், சென்னை-117.Vijilakshmiviji921@gmail.com**

**8**

**ஆய்வுச்சுருக்கம்**

இறையன்பு படைப்புகளில் சமயச் சிந்தனைகள் என்று அமைந்த இந்த கட்டுரையானது இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையான தொடர்பையும் அதோடு இறை தத்துவம் வெளிப்படும் வழிபாட்டு முறைகளை சமயத்துடன் எவ்வாறு ஒன்றி உள்ளது. இன்றைய சமூகத்துடன் அதன் நீட்சிகள் எவ்வாறு கடவுள், தெய்வம் என்ற பண்பாட்டு சமய மரபுகளுடன் இயற்கையை இணைத்து சமயக் கூறுகளான இயற்கை பொருளுடன் எவ்வறு சமயக் கடவுள் அடையாப்படுத்பட்டுள்ளன என்பதை எடுத்துரைத்து. அதன் வடிவ அமைப்பு முறைகளும் உணவு முறை , மொழி, ஆடை என்ற பல்வேறு நிலைகளில் சமயச்சினைகள் இறையன்பு தமது இலக்கிய படைப்புகளில் அதனை எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் சிந்தனைக் களனாக அமைகின்றது.

**திறவுச் சொற்கள்**

இறையன்புவின் படைப்பில் சமயச் சிந்தனைகள் என்ற தலைப்பில் அமைந்த இந்த கட்டுரையில் கடவுள், சமயம், இயற்கை, உணவு, மொழி, ஆடை ஆகியவை திறவுச் சொற்களாக இடம்பெற்றுள்ளன.

**முன்னுரை**

அண்மைக் கால தமிழ் இலக்கிய மரபுகளை கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் என்ற பல்வேறு பரிமாணங்களில் தமிழ் இலக்கிய உலகில் படைப்புகளை இன்றைய சமூக அக்கறையுடன் எழுதுபவர்களில் ஒருவராக இறையன்பு காணலாம். இருப்பினும் தமிழ் மரபுகளை மிக நெடிய நீண்ட பரப்பினை கொண்டிருந்தாலும் சமய வழிபாட்டு மரபுகளை தம் பண்பாட்டுடன் இணைத்து இயற்கை உலகையும் மனிதனுக்கும் உள்ள தொடர்பை இயற்கையில் சமய சிந்தனையும், உணவில் சமயச் சிந்தனைகள், மொழியில் சமயச் சிந்தனைகள், ஆடையில் சமயச் சிந்தனைகள் என்ற முறையில் சமயச் சிந்தனைகள் இறையன்புவின் படைப்பில் எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**இயற்கையில் சமய சிந்தனைகள்**

சமயம், மதம் போன்றச் சொற்கள் சமயத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. "சமயம் என்பதற்கு நேராக வழங்கும் ரிலிஜன் (Religi(n) என்ற சொல் இரு பொருளில் வழங்கப் பெறுகிறது. ஒன்று குறி சொல்வது. அதாவது இறைவன் திருவுள்ளத்தை அறிவதற்குச் சில நிகழ்ச்சிகளையும் காட்சிகளையும் அடையாளமாகக் கொள்வது என்ற பொருள் மற்றொன்று, இறைவனோடு

ஒன்றுபடுத்துவது அல்லது மீண்டும் பிணைப்பது என்பதாகும்"1 என்று கலைக் களஞ்சியம் கூறுகிறது.

ஒரே ஒரு கடவுளை மட்டும் வழிபடும் சமயத்தை ஒரு கடவுள் கொள்கை என்றும் பல கடவுளரை வழிபடும் சமயத்தைப் பல கடவுள் கொள்கை என்றும் அழைக்கப்படுகின்றனர். எல்லாப் பொருள்களும் கடவுளின் பகுதியாயினும், அவை எல்லாம் இணைந்த ஒரு முழு முதற் பொருளே கடவுள் என்று நம்பப்படுமானால் அது ஒருமை கோட்பாடு என்றும் அவற்றுடன் கடவுளின் அம்சம் பெற்ற எல்லாப் பொருள்களுமே கடவுள் தான் என்று மனிதனால் நம்பப்படு மேயானால் அது பன்மைக் கோட்பாடக அமைகின்றது.

'சமயம்' என்னும் சொற்தொடருர் இறையியல் சிந்தனைகள் இறைவனைக் கடவுள், தெய்வம், ஆண்டவன், பகவான் என பல சொற்கள் வழக்கில் இடம்பெறுகின்றன அவற்றுடன் இறைப்பற்றிய சிந்தனை இன்றோ, நேற்றோ தோன்றியது அன்று. பல ஆண்டுகளுக்கு முன்பே இச்சிந்தனை மனிதனுக்குத் தோன்றியிருக்கின்றது. அவற்றினை தொடக்க காலத்தில் மனிதன் இயற்கையைத் சமயக் கடவுளாக வணங்கினர். அவற்றினை சூரியன், சந்திரன், காற்று, நெருப்பு, மரம், செடி, கொடி என அனைத்தும் கடவுளாயின. தன்னைவிட உயர்ந்த சக்தி இந்த உலகத்தில் உண்டு என்பதை மனிதன் உணர்ந்து கொண்டான். தன்னால் கட்டுப்படுத்த முடியாதவற்றையெல்லாம் உயர்ந்த சக்திகளாகக் கருதினான். பின்னர் மனிதனுக்கு உண்டான அச்சம், பயம் ஆகியவை கடவுளை வணங்குவதற்குக் காரணமாக அமைந்தது. அதோடு எதன்மீது எல்லாம் மதிப்பும் நம்பிக்கையும் மனிதனுக்குப் உண்டானதோ அவை அனைத்தும் தொடக்காலத்தில் கடவுளாக மாறின. பின் முருகன், திருமால், வருணன் சிவன் , என பல சமயக் கடவுள்கள் தோன்றின. ஆனால் இச்சமயக் கடவுள் எப்போது தோன்றின என்பதை யாராலும் அறிதியிட்டுக் கூற இயலாது. இருப்பினும் தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரையில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே சமயச் சிந்தனையை இயற்கைப் பொருளுடன் இனைந்த ஒன்றாக பார்க்க முடிகின்றன. அதனை

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும் 2

என்ற தொல்காப்பிய நூற்பா குறிப்பிடுகின்றது. எனவே அந்தந்த நிலங்களுக்குரிய தெய்வங்கள் குறிப்பிடப்படுவது இயற்கை பொருட்களுடன் இனைத்தே சமயச்சிந்தனை காணமுடிகின்றது.

சமயத்தின் முதன்மையானவையாக இடம்பெறுவது கடவுள். அக்கடவுளைச் சென்றடைவதற்கு இரண்டு வழிகள் உண்டு என்று இறையன்பு குறிப்பிடுகின்றார். ஒன்று பக்தி மார்க்கம் மற்றொன்று ஆன்மீகம். என இரண்டும் சமயச் சிந்தனை உயிர்புட்டும் தன்மையுடையதாக குறிப்பிடுகின்றார். மேலும், முதலில் இறைமையை அடைவதற்கு ஆன்மீகம் சிறந்தவழி என்பதை இறையன்பு தன்னைத்தான் உணர்ந்து கொள்வதன் மூலம் இறைமையை அடையலாம். அதற்கு ஆன்மீகம் துணைபுரியும் என்று வலியுறுத்துகின்றார். ஓர் இறைக்கோட்பாட்டினை வலியுறுத்துவது

ஆன்மீகம். இதன்மூலம் கடவுள்களுள் உயர்வு தாழ்வு கொள்ளும் எண்ணம் நீங்கிவிடும். உலகில் உள்ள அனைத்தும் இறைத்தன்மை உடையவையே என்பதை உணர்ந்து கொள்ளவும் முடியும் என்று கூறிய அவர் இயற்கையான காற்று, கடல், முள், ஒளி முதலான பொருட்களில் இறைத் தன்மை கொன்டது என்பதை

**"காற்றிலும் இறைமை**
**கடலிலும் இறைமை**
**மொட்டிலும் இறைமை**
**முள்ளிலும் இறைமை**
**ஒளியிலும் இறைமை**
**உளியிலும் இறைமை"3**

குறிப்பிடுகின்றார். அதோடு கடவுள் பற்றிய சிந்தனைகளை கடவுள் - கட + உள் எனப் பிரித்துப் பார்க்கின்றபொழுது உள் இருப்பவன் என்று பொருள் தருகிறது. அதைப்போலயே ஒவ்வொருவரின் உள்ளும் கடவுட்தன்மை காணப்படுகிறது. கடவுள் என்பது வடிவம் அல்ல. அது கடவுள் என்னும் இறைமை நாம் கொண்டிருக்கும் வடிவங்களைத் தாண்டி பெரிய அளவில், அனைத்தையும் உள்ளடக்கிய ஒன்று. அவற்றினை

**"இருளையும் ஒளியையும்**
**வடிவத்தையும், வெற்றிடத்தையும்,**
**காற்றையும், காற்று மண்டலத்தையும்,**
**மரங்களையும், மலர்களையும்**
**எல்லா முரண்களையும், எல்லா இரு**
**பக்கங்களையும் உள்ளடக்கியது"4**

என்று குறிப்பிடுகின்றார். காற்றைக் களங்கப்படுத்தும் பொழுதும், மலர்களைக் கசக்கும் போதும், ஒரு பட்டாம்பூச்சியின் இறகுகளைச் சீதைக்கும் போதும், இன்னொரு மனிதனின் காயத்தைக் கண்டு களிக்கும்போதும், நமக்குள் இருந்த கடவுள் தன்மையையும், நம்மைச் சுற்றி இருக்கும் கடவுள் தன்மையயயும், தொலைத்து விடுகிறோம். இறைமையால் நம்மை நிறைத்துக் கொள்கின்ற போதுதான் விழிப்புணர்வும் நம்முள் உண்டாகும் என்று வெ. இறையன்பு தம் சிந்தனையினை உணர்துகின்றார்.

**உணவில் சமயச் சிந்தனைகள்**

உணவு என்பது உடலை வளர்க்கும் உன்னதம் மட்டுமல்ல உயிர்த்தன்மையை மேம்படுத்தவும் உணவே பெருந்துணை புரியும். உணவை உரிய முறையில் உண்டால் அது உடலுக்குப் பயனைத்தரும். மாறாக வழி தவறி உண்டால் அதுவே உடலுக்குத் தீமையாகவும் மாறிவிடும். உண்பது வழக்கமாக இருக்கலாம், அதுவே வழிபாடாகவும் மாறலாம்.

உணவின்மீது மரியாதை இருப்பவர்கள் தான் உண்ணுகிறார்கள். பலர் கொட்டிக்

கொள்கிறார்கள். சிலர் அள்ளிப் போடுகிறார்கள். சிலர் விழுங்குகிறார்கள். சற்று உற்று நோக்கினால் சாப்பிடுவதில் கூட வன்முறையைக் காணலாம். சாப்பிட்டோம் என்பதுகூட நினைவில்லாதவாறு சாப்பிடுவார்கள். பலர் நாம் என்ன உண்ணும்போது விழிப்புணர்வு இல்லாவிட்டால், படிக்கும்போது இருக்காது. ஏனென்றால் விழிப்பு உணர்வு என்பது ஒட்டுமொத்தச் செயல்பாடு ஆகும்.

ஆன்மீகப் பயணத்தில் முன்னே செல்ல சைவ உணவு சிறந்ததா, அசைவ உணவு சிறந்ததா என்கிறவாதம் எப்போதும் உண்டு. சமாளிக்கத் துடிப்பவர்களும் உண்டு. செடிகளுக்கு உயிர் இல்லையா எனச்முழுமையான நோக்கில் பார்த்தால் தாவரங்களை உண்பதும் அசைவமே. ஆனால் தொடர்புப்பார்வையில் மிருகங்களைக் கொல்வதைக்காட்டிலும், செடிகளைக் களைவது குறைந்த துன்பமுள்ள செயல். கொசுக்களிடம் அஹிம்சையைக் கடைப்பிடிக்க முடியாது என்று காந்தியே ஒப்புக்கொண்டு இருக்கிறார். இந்த அசைவ உணவினைத் தவிர்க்க வேண்டும் என்பதனை இறையன்பு வலியுறுத்துகிறார். அதற்கான வழிமுறைகளையும் உணவு உண்பவர்கள் பலரிடம் நீங்களே கொல்ல வேண்டும், அப்போதுதான் அசைவம் சாப்பிட முடியும் என்று சொன்னால், சைவ உணவிற்கு மாறி விடுவார்கள். இன்னும் சிலரைச் சமைக்கச் சொன்னால் விட்டுவிடுவார்கள்.

''இன்னும் சிலர் ஆடு அறுபடும்போது அருகில் இருந்தால் அறவே விழிப்புணர்வின்றிப் பழக்கத்துக்கு அடிமைப்பட்டவர்களே பலரும். ஒதுக்கிவிடுவார்கள். அவர்கள் கருணையுடன் அணுக ஆரம்பித்தால் அவர்கள் வாயிலிருந்து எலும்பு கனிந்த கனி போலக் கழன்று கொண்டுவிடும்.''5 காய்கறி, பழங்களை விற்கும் இடத்துக்குச் சென்றால் அங்கே தளதளவென இருக்கும் அவற்றைப் பார்த்து மனம் பூரிக்கிறது. ஏனென்றால் இயல்பிலேயே நம் உடல் அவற்றை நோக்கியே பழக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மாமிசக் கடைக்குச் செல்வபவர்கள் அங்கிருந்து விரைவில் வெளியேறவே விரும்புகிறார்கள்.

சைவ உணவு உண்பவர்கள் பலரிடம் நான் புனிதமானவன் என்கிற அகங்காரமான எண்ணம் இருப்பதைக் காண்கிறோம். அது அசைவ உணவைவிட அசுத்தமானது. கருணையினால் அன்பினால், உயிர்களிடத்தில் நாம் பிரதிபலிப்பதை உணர்பவர்கள், எதையுமே இயல்பாகச் செய்பவர்கள். சொற்களில், செயல்களில் வன்முறையுடன் வாழ்பவர்களும் அசைவ உணவை உண்பவர்கள்தான். அவர்கள் தங்கள் சொற்களைத் தாங்களே பின்னாளில் உண்ணவேண்டியிருப்பதால், பழக்கத்தினாலும், பத்தியத்தினாலும் நிகழாமல் பக்குவத்தினால் நிகழும்போது, ஒவ்வோர் உயிரின் நரம்பும் நம் உடலில் ஓடுவது புலப்படும்.

பருகும்போதும், கடிக்கும்போதும், தின்னும்போதும், மெல்லும்போதும், உறிஞ்சும்போதும், அரைக்கும்போதும், விழுங்கும்போதும் உணவின்மீது இருந்தால், நீரும் கூடப் புனிதத் தீர்த்தம் ஆகிவிடுவது உண்டு. உண்பதை வைத்தே அவர் பழக்க வழக்கங்களை அறிந்துவிடலாம். கவனம் உணவை ஒருவர் உணவை எப்படி உண்ணவேண்டும் என்பது குறித்து, புத்தர் நமக்கு சொல்லித் தருகிறார். “சாப்பிட வேண்டும், பேசுவதைத் தவிர்க்க வேண்டும் 'உண்ணும்போது மௌனமாக உண்ண வேண்டும். உணவை ரசித்து, ருசித்துச் உண்ணும்போது உணவே உலகமாக வேண்டும் ''6

என அறிவுறுத்துகிறார்.

இவற்றின் மூலம் அடுத்த உணவு வரும்வரை நாம் பேசலாம். வந்த பின்பு உண்பது மட்டும்தான் நிகழவேண்டும். நன்றி உணர்வோடு உண்ணும்போது வேகாததுகூடச் செரித்துவிடும். பாகற்காயையே இனிப்பாக்குகிறார்கள் சிலர். இயற்கையைக் காட்டிலும் என் சமையல் மேம்பட்டது என்ற தன் முனைப்பே இதற்குக் காரணம். கசப்பும், துவர்ப்பும், காரமும், புளிப்பும், அப்படியே உடலில் கலப்பதுதான் சரியான உணவுக்குச் சமச்சீர். சமைப்பவர்களிலிருந்து பரிமாறுபவர்கள் வரை உணவையே நைவேத்தியமாக மாற்றினால், உண்பது தியானமாகும். பசியாறுவது ஞானமாகும். இருப்பதை உணர்த்தும் என்கிறார் இறையன்பு.

**மொழியில் சமயச் சிந்தனைகள்**

இறைமையை அணுக எந்த மொழி உகந்தது என்று எண்ணற்ற சண்டைகளும் ஓயாத சச்சரவுகளும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இறைமை மொழிகளைக் கடந்தது. புலன்களைத் தாண்டியது, எண்ணங்களை மீறியது. அவற்றினை ஒரு கதைவடிவில் இறையன்பு தம் சிந்தனை முறையினை தம் படைப்பில் ஆங்காங்கு குறிப்பிடுகின்றார் அவற்றில் "புத்தரும், மஹாவீரரும் ஒரே காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள். ஒருமுறை ஒரே இடத்தில் அவர்கள் சந்திக்க நேர்ந்தது. இருதரப்பு சீடர்களும் அவர்கள் என்ன பேசுவார்கள் என ஆர்வமாக அருகே அமர்ந்திருந்தனர். ஒரு மணி நேரத்துக்கும் மேல் அவர்களுக்குள் மௌனமே நிலவியது'' மௌனத்தைக் காட்டிலும் சிறந்த மொழி எதுவுமே இல்லையென்பதை இறையன்பு அவர்கள் தம் படைப்பில் குறிப்பிடுகிறார்.

தியானத்தால் மௌனநிலையை அடைய முடியும். தியானத்தால் பூரியை உணரலாம். வானத்தை அறியலாம். இறைமையைத் தியானமாக மதிக்க வேண்டும். தியானம் என்பது எதுவுமே எண்ணாத நிலை. மௌனத்தை வார்த்தையில் காட்ட முடியாது. வாழ்க்கையில் காட்ட மட்டுமே முடியும். வார்த்தையின்மையில் வாழ்ந்து காட்ட மட்டுமே முடியும். எனவே இறைமையை அடைய மௌனமே சிறந்த மொழியாக பௌத்த சமய சிந்தனையினை குறிப்பிடுகிறார். எனவே இறைமையை உணர்ந்தவர்களும் மௌனத்தையே விரும்பினர் என்பதையும் சிந்தனை மொழியாக எடுத்துரைக்கின்றார்.

**ஆடையில் சமயச் சிந்தனைகள்**

ஆன்மிகத்திற்கும் நிர்வாணத்திற்கும் என்ன தொடர்பு என்பதை இறையன்பு தம் படைப்புகள் வாயிலாக எடுத்துரைக்கின்றார். ஆடைகள் ஆன்மீக வாழ்வில் பெரிய தொடர்பு இருப்பதாக சொல்லப்படுகிறது. அவற்றினை ஒவ்வொரு பிரியினும் ஒவ்வொரு வண்ண ஆடை, உரவுக்கு அடையாளமாக்கப்பட்டிருக்கிறது. துறவை அங்கீகரிக்காதது இரவாய் மட்டுமே. காவி என்பது பழுப்பு நிறம், உள்ளம் பழத்து விட்டதையும், எண்ணங்கள் உதிர்ந்ததையும் இது அடையாளப்படுத்துகிறது. சந்நியாசத்துக்குப் பழக்கமானது. புத்தத் தவிகள் குங்குமப்பூ வண்ணந்திலும், உடலூராரை வழிபடுபவர்கள் வெள்ளை நிறத்திலும் உடுத்துபவர்கள் ஆயர். ஆடைகள் நம்மை அடையாளப்படுத்துவதற்காக நாம் இன்னார் என்று காட்டவும். நாம் ஒரே குலம் தான் என்பதைப்

பறைசாற்றவும் கூடிய அடையாளங்களாக ஆகிவிட்டன.

ஆன்மீகம் என்பது அடையாளமல்ல. உடை என்பது அடைக்கலமும் அல்ல. உண்மையான ஆன்மீகப் அடையாளத்தைத் தொலைப்பதில் ஆரம்பமாகிறது. முகவரியைத் தொலைப்பதில் முகிழ்கிறது. முகத்தையே இழப்பதின் முடிவுக்கு வருகிறது. மஹாவீரர் ஆடையே இல்லாமல் அமர்ந்து இருந்ததிலும் அழகு இருந்தது. புத்தரின் மெல்லிய உடையும் மேன்மையாய் இருந்தது.

உடுத்துபவர்கள் உணர்வில்தான் உடைகள் உன்னதம் அடைகின்றன. ஆடையணிந்தும் சிலர் அம்மணமாகவும். நீர்வானத்தினும் சிலர் நிறைவாகவும் நிற்பதைக் காணலாம். நம்மின் இயப்பாக இல்லாத அழகைத்தான் ஆடைகளின் ஐயமாவது அடைய முயற்சி செய்கிறோம். ஆடையின் மூலம் நம் மதத்தை, வாதியை, தரத்தை, வகுப்பை வெளிப்படுத்த முடியும். உடைகளைத் தாண்டி மனத்தில் இருக்கும் ஆபாசத்தை ஒன்றும் செய்ய முடியாது. எனவே ஆடையில் ஆன்மீகம் இல்லை. ஒவ்வொருவருடைய மனதில்தான் ஆபாசம் இருக்கிறது என்பதை இறையன்பு தெளிவுபடுத்தியுள்ளார்.

**முடிவுரை**

அண்மைக்கால படைப்பாளர்களில் தலைசிறந்த கவிஞர்களின் ஒருவராகவும் இடம்பெற்றிருக்கும் இறையன்பு அவர்கள் தங்கள் படைப்புகளில் சமய சிந்தனைகளை இயற்கை பொருட்களுடன் இனைத்து. இறை என்று பொருளிலும் கடவுள் என்ற சமய காரணிகளையும் அதனுடன் வடிவங்களையும் இறை கொண்டிருக்கும் இயற்கை பொருட்களின் வகையினங்கள் மற்றும் மனிதனின் அன்றாட வாழ்வில் பெரும் பங்கினை வகிக்கும் உடை, உணவு, மொழி முதலானவற்றில் சமயம் ஒன்றிணைந்துள்ளதை இறையன்பு தம் படைப்புகளில் வாயிலாக சமயச் சிந்தனை காணமுடிகிறது.

**அடிக்குறிப்புக்கள்**

1. கலைக்களஞ்சியம் – .தொகுதி.4. பக்.451.
2. தொல்.பொருள்.நூ-18
3. வெ. இறையன்பு, வாழ்க்கையே ஒரு வழிபாடு, பக்.1.
4. வெ. இறையன்பு, சின்னச் சின்ன வெளிச்சங்கள், பக்.50 – 51
5 . வெ. இறையன்பு, வாழ்க்கையே ஒரு வழிபாடு, பக்.22 - 23.
6. மேலது, பக்.25.
7. மேலது, பக்.47.

**துணைநூற்பட்டியல்**

1. இறையன்பு. வெ, சின்னச் சின்ன வெளிச்சங்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் , அம்பத்தூர், சென்னை – 600098, 2017.
2. இறையன்பு. வெ, வாழ்க்கையே ஒரு வழிபாடு, விஜயா பதிப்பகம், விஜயா கார்டன்ஸ், 317, என்.எஸ்.கே.சாலை, வடபழனி, சென்னை-600026, 2013.
3. கலைக்கள்சியம் – தொகுதி.4, தஞ்சைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2004.
4. தாசன்.மு, தொல்காப்பியக் களஞ்சியம் பொருளதிகாரம், அபிலா பதிப்பகம், நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், 67/1, கோர்ட் ரோடு, நாகர்கோயில், மார்ச்சி – 2011.